


# ஆராதனை

நெதர்லாந்தின் மலையக எழுத்தாளர்
திருமதி சுஜி ரமேஷ்



# ஆராதனை

திருமதி. சுஜி ரமேஷ்



## காட்சியும் கவிதையும்

## 2019



ஆசிரியர்
திருமதி.சுஜிரமேஷ்

முதலாவது படைப்பு

“அணையா ஜோதி“

கவிதைத்தொகுப்பு

பாரதி அச்சகம்

பிரான்ஸ்

வெளியீடு நெதர்லாந்து

10-09-2017

இரண்டாவது படைப்பு

“ஆராதனை“

கவிதைத்தொகுப்பு

வெளியீடு

மலையகம் - இலங்கை

23-02-2019

மின்னஞ்சல்

sujiramesh1010@gmail.com

நூல் வடிவமைப்பு

க. ஸ்ரீதாஸ்

நெதர்லாந்து



# சமர்ப்பணம்



எண்ணும் எழுத்தும்
என்னுள் விதைத்து,
எழுதுகோலும் ஏடுகளும்,
எனக்காய் அளித்து.
விண்ணைத்தாண்டியும்
என்னைப்பேசவைத்த
பள்ளிக்குப்பரிசளிப்பாய் ஒரு
சந்தோச சமர்ப்பணம்

# ஆசியுரை

## ஆள்புலஅக மிக நுக வரு தேமது
## வாழ்புல சூழ் நனி மேல் உரு தமிழது
## வாழி வாழி

தேன்தமிழ்த்தோட்டத்து வதை ஒற்றி விதை பதிக்கும் கவி தையலே வாழி. கவி தைத்து நற்கரு புதைத்து தமிழ்விதைப் படைக்கும் வித்தகரே நின் சொல்லடுக்கின் சுயம்வரத்தில் விற்களின் வேகம் நாணபற்றி தென்றலை சிலிர்க்க வைக்கும் அதிர்வுகளில் குமுகம் மெய்யள்ளி சுவைப்பதை உன் தமிழ் காட்டி அறிகிறேன்.

நெறிகளில் நின்றாடும் நின் சொற்கூட்டுச்சுவரில்பட்டுத் தெறிக்கும் பாவேட்டில் வேட்டொலிகளின் வினைத்திறம் முட்டிச்சரிவதில் முடிசூடிய முழுமனிதம் ஆகிறாய்.பட்டுக் கொஞ்சம் ஒற்றி இணையவலை நரம்புகளில் அறக்குருதி பொசிப்பதில், முகம் நூல் விரிப்பதில் நூலிழை என் பதம் நுண்ணெறி அறிகிறேன்.

இருப்பு என்பதன் இரு பொருள் கவி இழைப்பதெனின் நீ இருப்பாய் இளவலாய் கவிதை இருப்புக்குள் நீ இயலாய்.

வயதேறி நீ
வாலிபம் பெற,
வயதாகி அவள்
வடிவம் மாற,
வலுவிழந்தாள் பெற்றவள்.
வாலிபங்கள் மயக்கொலிகளில் மாண்டுவிடும் பொழுதுகளை அறைவிழுத்தி ஆட்சி செய்யும் சொற்பறைகளின் அலார அடிகளில் வடிவங்களை மாற்றும் சொல்ழகு சொல்கின்றன
வாழ்க்கை நியதியை
விழிக்குப்
பின்னால் இருக்கும்
கனவுகளை

மனதின் மகுடங்கள் அரசோச்சும் அலங்கார வையத்தை கண்கள் கொத்தி கவர்ந்தெடுத்த எச்சங்களை கனவுக்குள் செறிவு செய்து அறிவோடு அகமாக விழி புதைத்து களி கொள்ளும் கனவுக்கு விழிக்காப்பு சொல்லும் வரிகளில் பலர் எண்ணங்கள் செருகிச்செல்லும் அழகு சிறப்பழகு.

மிருதுவான நம்
சருகுத்தோட்டத்தில்
நெருப்பை எறிந்து
கருக்கியது யாரோ!!

ஆம் அறங்கள் தங்களை இழந்துவிடும் பொழுதுகளில் சுரங்கள் கெட்டு காற்றும் காது களை மூடிக்கொள்ளும் கட்டாயம் பிறழ்வுகள் கொடுத்து விடும். ஆழமான எண்ணக்கருவை அழகுடுத்த சொற்களில் மெல்ல பதிப்பதில் வலிப்பட்ட மனங்களை வருடும் கருவழகு கவியழகு படைப்பழகு அருமை.

இருப்பு என்பது இருப்புவரை. இது இறுப்பு, கையிறுப்பு. கல் இல் உள்ளுள்ள கல் கல்லாகா உளி கொத்தி உள்ளீடு காட்டும் கல்லே கருவாகும். அழகு உருவாகும்.

உளிகளை உரமாக்கி தமிழை வரமாக்கி எழுத்துலகில் என்றும் இலக்கெய்தி வாழ்க.

சொல்லழகும் சுவை கோர்ப்பழகும் எண்ணத்தியல் வரியழகும் வரமாக கொண்டிழையும் வரு கவியே திருமதி சுஜி இரமேஸ் அவர்களே ஓயாதுய்யட்டும் உங்கள் படைப்பு வாழ்க.

துகள் - நாடகத்தொகுப்பு
சொற்காடு- கவிதைத்தொகுப்பு
நூலாசிரியர்
பிராங்பேர்ட் யேர்மனி
கவிஞர்
திரு.ப.தியான்

# முகவுரை

கவிஞர் திருமதி "சுஜி ரமேஷ்" அவர்கள் என் இலக்கிய நண்பர் மட்டுமல்ல நான் அவரின் கவி ரசிகனும் கூட! ஐரோப்பிய புலம் பெயர் வாழ்வின் இறுக்கமான வேலைப்பளுக்களின் மத்தியிலும் அவர் தமிழில், தமிழ் இலக்கியத்தில் உடலும் உயிரும் போல் இணைந்தவர்!

புலம்பெயர் தேசத்தில் மிக மிகக் குறைவாக கிடைக்கப்பெறும் பொன்னான நேரங்களை தமிழிற்காக பயன் செய்து தமிழ்ச்சமூகத்திற்கு கருத்து நிறைந்த பல கவிதைகளை தந்து கொண்டிருப்பவர் எங்கள் மலையகக்கவிஞர் சுஜி அவர்கள்.

கவிஞர் ஓர் சிறந்த எழுத்தாளர் என்ற முகம் தாண்டி,அவர் ஓர் சிறந்த பேச்சாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர்,கவியரங்கவாதி, பட்டி மன்றவாதி என்பதோடு ஒரு பாடலாசிரியர் என்பதும் எங்கள் தமிழ்த்தேசத்திற்கும் மலையக மண்ணிற்கும் ஓர் சிறப்பான அடையாளமாகும்.

தமிழ் இலக்கணம் தாளங்களை வைத்தே வகுக்கப்பட்டுள்ளது. எங்கள் மலையகக்கவிஞரின் கவிதைக்கு ஓர் சிறப்புண்டு, ஓசையை அடிப்படையாகக் கொண்ட அவரின் கவிதைகளில் எதுகை மோனை சிறப்பாக வந்து விழுவது கவிஞரின் சொல் ஆழத்தின் ஆளுமையை வாசகனுக்கு தாளம் போட்டுக்காட்டிவிடுகிறது.

கவிஞரின் கவிதைகளை பல கோணங்களில் ஆராய வேண்டியிருந்தது. கருத்து ,வடிவம் ,ஓசை, சுவை, போன்ற பல விடயங்களை பல கோணங்களில் பார்க்க-வேண்டியிருந்தது. பல்வேறுபட்ட சூழல்களில் எழுதப்பட்ட கவிதைகள் என்பதால், பல்வேறு பட்ட உணர்வுகளை கவிஞர் அள்ளித்தந்துள்ளார். கவிஞரின் கவிதைக்குழந்தைகளை என் பேனா என் தமிழ் உணர்வால் ரசித்து, ருசித்து உரைத்திருக்கிறது.ஆமாம்!... நான் கவிஞரின் கவிதைகளை நேசிப்பவன். அதனால் என் உரையை என் கவி ரசிப்பை ஒரு முகவுரையாகவும்ரசிகனின் கவி ரசிப்பாகவும் வாசகர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

தன் முகநூலில் எழுதிவந்த முத்தான கவிதைச்செல்வங்களை.. தனது இரண்டாவது நூலான "ஆராதனையில்"அழகாக அடுக்கி வாசகர்களுக்கு கவிதைத்தீபம் காட்டியுள்ளார் கவிஞர்!

கவிஞரின் கவிதைகளை ரசித்தவன் எழுதிய கருத்துத் தேடல்களே இவை! இதோ!...உங்களுக்காக அவ்வரிகள்

"தமிழ்" என்னும் கவிதையில்
"புலன்கள் நிறை என்று
உணர்தல் பிழையன்றோ,
என்று,வெண்சங்கு ஊதி
தமிழ் மொழியின் ஒலியின் இனிமையை முரசறைகின்றார் கவிஞர்.

"கற்ற தமிழையும் கற்பித்த தமிழையும்"நின்று தலை வணங்க வந்த கவிஞர்!..தாய்த்தமிழால் ஒரு சீர்வரிசை தருகின்றார்! இப்படி.....
"புலம் பெயர் நாட்டிலும் தளம் கண்டேன்
வல்லமை உனதாக புலமையும் நீயாக"

என்று,தாய்த்தமிழை பருக வைத்த குருகுலமே!தங்கள் தாழ் பணிந்து தமிழே சரணம்!- என்ற ஒப்புவிப்போடு.. தன் பாடசாலைக்கே இப்படைப்பு சமர்ப்பணம்!என்று நன்றியிடுதல்,தமிழுக்குரிய சிறப்பே!

"தாய்மைக்கு இலக்கண மிடும் கவிஞரின் தாயன்பு வரிகள் ஒரு தாய்க்கு மட்டும் தான் எதையும் சாத்தியமாக்கும் அசாத்திய மன வலிமையுண்டு என்பதை உணர்த்துகிறது அம்மா"வை கவிதையிற் கூட பொய்யாக்க விரும்பாத கவிஞர்!....

தன் மென்மையில் மெய் எழுதுகிறார்!.
"உன்னை விட இவ் வையகத்தில்
வேறு எவளடி பேரழகி,
என்று,தாய்மையை இத் தரணியில் வியக்கவைக்கின்றார்.

“தையலிவள் மெய்யழகும்
பொட்டிட்ட நுதல்
பாம்பிரண்டும்
தடி இடை சுரண்டும்
தளிர் கூந்தல்
பின்னழகு பின்னலதும்
பேரழகு“

என்ற வரிகளில் நெற்றிக்கு “நுதல்“என்ற பழந் தமிழ்ச்சொல்லை கையாண்ட கவிஞர்.பெண் என்ற பதத்திற்கு உயர் வழக்கச்சொல்லான “தையல்“என்ற சொல்லை பயன்படுத்தியிருப்பது கவிஞரின் மொழியின் ஆழத்தை தெளிவுபடுத்துகிறது.

இக்கவியில்..“தடி இடை“என்ற சொல் பல அர்த்தங்களை தந்திருந்தாலும்,இவ்விடத்தில், வன்னிடை, மென்னிடை என்ற தமிழின் ஆழத்தில் அழகான கருத் தை கவிதை ஊட்டி விடுதல் கவிஞரின் மொழிச்சிறப்பு என்பேன்

“சுமந்தவர்கள் சபிக்கப்பட சிறுசுகள் சிரம் அறுந்து சாபத்தில்“

இந்த வரிகள் கவிஞர் ஒரு சமூக அவலத்தை விழித்துச்சொல்லியிருப்பது உலகத்தில் உள்ள எல்லா மூலைத்தெருக்களில் வாடும் குழந்தைகளுக்கும் பொருந்தும் வரிகளாக அமைந்திருக்கிறது. அதே வேளை,

“பெண்மையின் ஏட்டில் ஆண்மை இடும் அழகிய கையொப்பம்“என்று குழந்தையை அடையாளப்படுத்தியதும் சிறப்பு.

”நவயுக தொழில் நுட்பத்தின் தாக்கம்” சொல்ல வந்த கவிஞர்! ஒரே வரியில் நவீனத்தை உடைத்துக்காட்டுகிறார் தன் ஆழமான சிந்தனை வீச்சில்.

“பூனையை விரட்டிய எலி,இப்போது
பூலோகத்தையே மிரட்டுகிறது“
என்ற,கணனி யுகத்தை நாசூக்காக உரைக்கிறார் கவிஞர். இன்றைய பெண்களின் நவீன நிலையையும்

“இடை இல்லா பீப்பாவாக்கி“
என்று ஒரு செல்லக்குட்டுக் குட்டும் கவிஞர்!மேலும்...

“மானிடத்தின்
மனதைக் கழுவும்
மார்க்கமுண்டா “
சொல்??? ஓ நவீனமே!!!
என்ற,இந்த இடத்தில் வாசகனை விழிக்க வைக்கின்றார்!

“பெண்மையின் ஏட்டில் ஆண்மை இடும் அழகிய கையொப்பம்“ என்று குழந்தையை அடையாளப் படுத்தியது தனியழகு.

உழைத்து..உழைத்து உருகி ஒரு பிள்ளையை உருவாக்கிய ஒரு தாயை பாட வரும் கவிஞர்!
“தங்கக் கொலுசோடு கடல் கடந்து வந்தேன்
நீ கால்களை இழந்த பின்பு“என்று,வாசகனை சத்தமிட்டு அழவைத்து விடுகிறார்.

மகனுக்காக காத்திருக்கும் தாயொருத்தியின் புலன்கள் மெல்லச்செயலிழக்கிறது, அந்த தாயின் ஏக்கத்தை கவிஞர் கவிதைக்கு கண்ணாடியில் காட்டுகிறார்.இப்படி!....
“நீ பறந்து சென்ற ஆகாய தேசம்
எனக்கு நினைவில்லை,
நீ குடியிருந்த இந்த கருவறை விலாசம்
உனக்கேன் தெரியவில்லை“
என்று,புலம் பெயர்ந்த அனைவரையும் தாயகம் அழைத்து வந்து அம்மா பாசத்தில் இணைத்துவிடுகிறார் கவிஞர்.
“ஒப்பந்தத்திட்டம் தப்பானால்
சப்பாத்தும் சாப்பாட்டுத்தட்டம்“

என்று, மூன்றாம் உலக நாடுகளின் வலியை உணர்த்திச்சொல்கின்றார். கவிஞர். இதுதான் கவிஞர்களின் மென்னுணர்வு என்பது

ஒரு மண்ணின், பெண்ணின் வாசத்தின் ஒழுக்கத்தை வாசகனை ஓவெண்ணுமளவுக்கு வார்த்துள்ளார்! இப்படி!

"எருதுகள் மேய்ந்து விட்டுப்போவதற்கு
அவள் ஒன்றும் சேற்று நிலமல்ல"

என்னும் தமிழ் மகளின் மண்வாசனையை!மரபில் நின்று பாடியுள்ளார்

"தேசம் கடந்த போதும் தமிழ் சுவாசம் சுமந்த படி,தாய் மண்ணை அள்ளிக்கொண்டு விழுதுகளை வெட்டி விட்டு விடைபெற்று வந்தோமே தவிர வேர் அறுத்து வரவில்லை,

என்று தாய்மண் உறவுகளுக்கு தன் மூச்சால் உயிர் கொடுக்கும் வரிகள்.. இந்த தாய்மண் வரிகள்.

கவிஞரின் கவிதைகளை வாசியுங்கள்.
மலையகம் தந்த கவிஞரை வாழ்த்துங்கள்.

பூவரசம் தொட்டில்,புளியம்பூ
கவிதை தொகுப்புகளின் நூலாசிரியர்,
கவிஞர் திரு சி. வசீகரன்
சுவிட்சர்லாந்து.

# அன்புடன் வாழ்த்துகின்றேன்

முதல் படைப்பாய்
முத்தாய்
அணையா ஜோதியில்
பிரகாசம் கண்டேன்....!
இரண்டாவது படைப்பிது
மலையகக்கவிதாயினியின்
ஆராதனை கண்டு
அகமகிழ்வு கொள்கிறேன்.....!
பெற்றதின் பெருமை
கற்றதன் கல்வி
தந்ததின் நன்றியாய்
காணிக்கையாகும் ஆராதனையிது...!
காட்சிகளே கவிதையாகி
கவிதைகள் சாட்சியாகி
ஆட்சி செய்வது
ஆராதனைக்கு பெரும் சிறப்பு....!
பொய்யுரைக்காத
நிஜங்களின் தரிசனமாய்
மண் வாசம்
மறவாத கரிசனம்.....!
வாழ்வியலின் வடுக்கள்
வலி சுமந்த போதிலும்
வர்ணம் பூசாத
நிதர்சனங்கள்....!
ஒத்திகை இல்லாத
பாத்திரங்கள்.
ஒப்பனை போடாத
முகங்கள்.
அத்தனை அழகு கொண்ட
ஆராதனையை கண்டு
ஆனந்தம் அடைந்னே.
வாழ்க தங்கள் பணிகள்

என்றும் தமிழ் நேசனாய்
திரு. க. ஸ்ரீதாஸ்
நெதர்லாந்து.

# வாசகர் வாழ்த்து

என் கவியுலக அன்புத்தங்கை திருமதி "சுஜி ரமேஷ்" அவர்களின் அணையா ஜோதி கவிதைத்தொகுப்பு, இதய ஜோதியாய் இன்னும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அதன் வெளியீட்டு விழா முடிந்து வீடு வந்ததும் முழுக்கவிதை களையும் வாசித்து முடித்தேன். அத்தனை கவிதைகளும் என்னை பிரமிக்க வைத்தது.

இந்த அணையா ஜோதியின் அடுத்த தீபம் ஆராதனை என்றதும் என் உள்ளமது ஆனந்தத்தில் துள்ளி விளையாடுகிறது. உந்தன் கவிதைகள் .வற்றாத நதியாக ஊற்றெடுத்து, தடாகத்தில் தாமரை மலர் போல் என்றும் பிரகாசிக்க என் வாழ்த்துக்கள்.

உண்மைகள் எப்போதும் கசப்பானவை என்று தெரிந்தும் கூட, அதை துல்லியமாக எடுத்தியம்பும் உன் கை வண்ணத்துக்கு என் வாழ்த்துக்கள்.

பாமரனையும் ஏற்றிவைக்கும் உன் பக்குவத்துக்கு என் வாழ்த்துக்கள்.வறுமையிலும் செம்மையாக வலம் வந்து கொண்டிருக்கும் மண்ணின் மனங்களை படம் பிடித்துக் காட்டும் என் பைங்கிளிக்கு வாழ்த்துக்கள். எனக்கு மட்டும் தான் எல்லாம் தெரியும் என மார் தட்டிக்கொள்ளும் இவ் உலகத்தில், எனக்கும் எழுதத்தெரியும் என்று தன்னை பறை சாற்றிய உன் திறமைக்கு என் வாழ்த்துக்கள். வாழ்க உந்-தன் கைவண்ணம், வளர்க உந்தன் கவிதைத்தாகம்.

ஆராதனை அகிலமெங்கும் பெருமையுடன் வலம் வரவேண்டுமென ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகரின் பாதாரம் பணிந்து வாழ்த்தி மகிழ்கிறேன்.

வாழ்க தமிழ் மொழி.
அன்பு வாசகியாக அக்கா,
திருமதி பாலசுப்ரமணியம் குணலோகநாயகி.
நெதர்லாந்து

முன்னாள் எழுதுவினைஞர்
கரைச்சிப்பிரதேச சபை
கிளிநொச்சி

# வாசகர் வாழ்த்து

நெதர்லாந்து தேசத்தில்
ஒரு கவி முகம்
அணையா ஜோதியில்
அறிமுகம்
படித்துப்பார்த்தேன்
அவை யாவிலுமே
ஒளி முகம்
அன்றே நானும்
வாசகனானேன்.
யதாரத்தங்களை
வார்த்தைக்குள் அடக்கி
அர்த்தமுள்ள வரிகளாய்
கவிமாலையாய் தொடுப்பதே
அவரின் தனிச்சிறப்பு.
அடுத்த படைப்பு
ஆராதனை
தொடுத்த கவிகளோ
மனதினை வருடியது.
ஆராதனை
தரணியெங்கினும்
புகழ் பரவ
மனதார வாழத்துகின்றேன்.
தங்களது
தமிழ்ப்பணி சிறக்கட்டும்.

அன்பு வாசகனாய் அண்ணா
திரு. ஆ. விஜயன்
பாடகர்
நெதர்லாந்து.

# குடும்ப வாழ்த்து

என் அன்புத்தம்பியின் மனைவி கவிதைக்கலையரசி"திருமதி சுஜி ரமேஷ்" அவர்களுக்கு,

நெதர்லாந்தின் மலையக எழுத்தாளர் என்ற அடையாளத்தோடு ஒரு படைப்பாளியாக என் மைத்துனி கால் பதித்திருப்பது எங்கள் குடும்பத்தின் பெருமை.

அவரது அணையா ஜோதி என்ற கவித்தொகுப்பை வாசித்த போதுதான், அவரது திறமை கண்டு பிரமித்துப் போனேன், அவருக்குள் ஊற்றெடுக்கும் கவிதைகளுக்கு வாசகியாகி எனக்குள்ளும் கவிதை எழுத வேண்டும் என்ற அவாவும் ஏற்பட ஆரம்பித்தது. கவிதைகளை வாசிப்பதிலும், இரசிப்பதிலுமே அதிக ஆர்வம் கொண்ட நான்,விமர்சனங்கள் எழுதும் அளவுக்கு முன் வந்ததில்லை. முகநூலில் சுஜியின் கவிதைகளை வாசித்து ,வியந்து தொலைபேசி மூலமாகவே இதுவரை அவரை ஊக்கப்படுத்தி வந்துள்ளேன்.

தனது அடுத்த படைப்பான ஆராதனை கவி தைத்தொகுப்புக்கு சுஜி என்னிடம் வாழ்த்துரை கேட்ட போது கொஞ்சம் தடுமாறிப்போனாலும், அவரிடம் இருக்கக்கூடிய கவியாற்றலையும், பேச்சாற்றலையும் வாழ்த்தக்கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டேன்.

அவரது திறமைக்கு உறுதுணையாக இருக்கும் எனது தம்பியை நினைத்து வியந்து நிற்கின்றேன். என் தாயார் இவர்கள் இருவருக்கும் அமைத்துக்கொடுத்த இந்த வாழ்வு பல்லாண்டுகள் சிறப்பாக தொடர இறைவன் அருள் புரிய வேண்டி, சுஜி உங்கள் எழுத்துப்பயணம் இன்னும் பல அடி-களைக்கடந்து, சிகரங்களைத்தொட்டு ஒரு நல்ல எழுத்தாள ராக சமூகத்தில் பெயர் பெற, மைத்துனியாக மட்டுமல்ல ஒரு தாயாகவும் என் ஆசீர்வாதங்களைத் தெரிவித்து விடை-பெறுகிறேன்.

அன்புக்குடும்ப உறவாக,
யசோதராதேவி மகாலிங்கம் பிள்ளை
அவுஸ்திரேலியா.

# எனக்கான நிமிடங்களின் பகிர்வுகள்...!

கவிதையின் தேசத்தில் பறக்கத்துடிக்கும் என்கவிச்சிறகுகளை வருடிவிட்டு, காற்றுவழியே கற்பனையாகத்தவழும் என் எண்ணங்களை எழுத்துருவில் கவிதை களாக நேசிக்கும் அன்புள்ளங்களுக்கும். என்னை ஆளும் என் தமிழுக்கும் முதல் வணக்கம்.

"அணையாஜோதி" கொடுத்த அனுபவமும், ஆர்வமும் என் அடுத்த தேடலுக்கு உரமாகி அது "ஆராதனை"யாக அலங்கரிக்கிறது. எழுத்துக்களின் சமகால நேசிப்பும், எண்ண ஓட்டங்களும் கணிப்பீட்டளவில் புதுக்கவிதைகளுக்கே புள்ளியிட்டு வருகிறது.

காலத்தின் தேவை கருதி படைப்புகளை கொடுப்பது படைப்பாளர்களது கடமை என்றாலும், "கவிதைகள்" என்பது என் வரையில் ஒரு ஆத்ம திருப்தி என்பதே அழகான உண்மை. அதற்கு உறுதுணையான என் கணவரது உதவி, என் கலைச்சேவைக்கு கிடைத்த வலது கரம் என்பதும் இப்பணியின் நேர்மை.

காட்சிகளை கற்பனையாக்கி,என் சிந்தனைகளை கருவாக்கி, என் எண்ணங்களைச்சுமந்த இந்த ஏடுகள் கவிதைகளால் பேசுகிறது. இனி வாழ்த்து வதும் வரவேற்பதும் உங்கள் கைகளில்.

என்றென்றும் தமிழோடு,
நெதர்லாந்தின் மலையக எழுத்தாளர்,
திருமதி "சுஜி ரமேஷ்".




சங்கம் வளர்த்து சந்தம் பாடி,
அந்தம் தொடும் சிந்தனைகளால்
அங்கம் சிலிர்க்க சிந்து பாடி,

விந்தைகளால் சுடர்விட்டு
செந்தணலாய்ச்செறிந்த
செந்தமிழாம் பைந்தமிழே!!

கற்றேந்த புலவனும்,
கல்லா அறிவில் பாமரனும்,
சொல்லேந்தி நல்
சொற்சுவையூட்டி,

மெருகேற்றி இன்ப
பொருள் ததும்ப
விண்சார்ந்து மின்னும்
வெண்சங்கே பொன் மொழியே!!

தமிழே நின் நயம்
உணரா மாந்தர்
புலன்கள் நிறை என்று
உணர்தல் பிழையன்றோ.

தொல் காலம் தொட்டு
தொழா குற்றம் வரை
இறை நெறி சீர் காட்டிய
இன்சுவையே இன்பத்தமிழே!!!

சாதல் அறிந்தே
மானுடம் தோன்றி,
வீழ்தல் இருந்தும்
மீழ்தல் ஏற்று,

ஐம்புலன்கள்
அறிந்தோங்க,
ஐம்பூதங்கள்
அசைந்தாட,

தமிழ் என்னும் நம்
திருமொழியே!! என்
வாழ்வின் வழி நெறி நீ என்றே
முன் மொழிவேன்.

தாரகம் தவறா
தார்மீகம் செங்கோலாய்,
வாகை சூட்டிய
வண்ணத்தமிழே!!

ஏழுலகும் ஏற்புடைய
ஏற்றம்! நின் தாழ்பணிந்து
தலை வணக்கம்
தமிழே சரணம்.



பொன் எழில்
பூம் பொழுதுகளில்
விதையாகி முளையிட்டு,
விடலைத்தளிராகி,

விடைதேடி வேர்பிடித்து,
நரம்புகளுக்கு கல்வியால்
நீர் பாய்ச்சி எனை
பருக வைத்த குருகுலமே!!

புலம் பெயர் நாட்டிலும்
தளம் கண்டேன்
வல்லமை உனதாக,
புலமையும் நீயாக.

வலியதை திடமாக்கி
வழியதை தெளிவாக்கினாய்,
பெருமையடைகிறேன் உன்
பழைய மாணவியாக.

பருவம் கடந்தும்
பருகத்தூண்டும்
பள்ளி நினைவுகள்
படிந்த மகிழ்வோடு,

அறிவால் நெறியிட்டு
அனைத்தையும் அறியத்தந்த
அகராதியே!! அறிவுக்கூடமே!! என்
அறிவுக்கேற்ப ஓர் "ஆராதனை"

கொட்டகலை த.ம.வித்தியாலயத்தின்
விட்டகலா மீட்டல்களோடு என்
பாடசாலைக்கே இப்
படைப்பு சமர்ப்பணம்.


— — — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

வாழ்க்கையின் ஆரம்பம், நாம் மேல்
வைக்கும் அடியில் அல்ல,
நம் மேல் விழும் அடியில்.

— — — — — — — —

திரும்பிக்கொடுக்க முடியாத கடன்காரன் மகன்(ள்).
திரும்பப்பெற நினைக்காத வட்டிக்காரன் தாய்.



தலை முறை மாற்றங்களில்
இலை மறையான விடயங்கள்
முளையிட்டு அரும்பாகும்
வெளிப்பாடுகள்,

கருக்களாய்,
கற்பனைகளாய்,
நவீன வானில்
நட்சத்திரங்களாய்

புதுக்கவிதைகள்,
சமகால இலக்கியங்கள்,
சிறகுகளை விரித்து
சாதிப்பது சிறப்பு.

திறந்த வெளியில்
தென்றல் தரும்
நிரந்தர இன்பம்
மருந்தாவது போல,

வாடிய பொழுதுகளில்
வண்ணங்கள் சுமந்து
வருடி விடும்
கோடி மலர்களைப்போல,

பூத்துக்குலுங்கும்
பூஞ்சோலையாய்
பூபாளமிடும்
புதுக்கவிதைகளை,

படைக்கும் என்
முயற்சியில்
முதலாவதாய்
முகவரியிட்டுக்கொள்ளும்

கோடி எண்ணங்களை
கூடிச்சேர்த்த என்
கவிமலர்களால் ஒரு
"ஆராதனை"

---

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

பொழுது போகட்டும் என்பதற்காக பொழுதை போக்காதீர்கள் புத்திசாலித்தனமாக பிரயோசனப்படுத்தப்பட்ட பொழுது போக்குகளால் தான் எத்தனையோ படைப்புகளும் கண்டுபிடிப்புகளும் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.



ஏழ்மையை
எழிலாக்கி,
வலிகளை
வலிமையாக்கி,
உறவுக்கு
உரமிட்டு
உயிர் கொடுத்த
உத்தமியே

அங்கம் தேய்ந்த
அசையாச்சிலைக்கு,
ஆடை கட்டி
ஆதரவு காட்டி,
தோளில் பூட்டி
தோரணமாட்டி,
சீராட்டும்
சீமாட்டியே!!

பிச்சை எடுத்து
எச்சம் உண்டாலும்,
இழி செயல் இன்றி
பழிச்சொல் காத்து,
காப்பகம் தள்ளி
கடனது தீர்க்காமல்,
காப்பது தலையென
தூக்கிச்சுமக்கும்
சுமை தாங்கியே!!

வறுமையிலும்
வாழ்க்கை இதை
சொர்க்கமென்பேன்.
ஏற்றுக்கொண்டாய் பின்
ஏந்தியுங்கொண்டாய்,
என்னவளே!!
உன்னை விட இவ்
வையகத்தில் வேறு
எவளடி பேரழகி.

---

வாழ்வியல் வாசகம்
“திருமதி சுஜி ரமேஷ்“

பிறரால் நீ பயன்படுத்தப்படுகிறாய் எனும் போது
விலகிக்கொள்,
பிறருக்கு நீ பயன்படுகிறாய் எனும் போது
பெருமை கொள்.



கவிதைக்கு
பொய் தான்
அழகென்பர்.
அதனால்,
உன்னை
கவிதையாக்கி
பொய்யாக்கும்
தைரியம்
எனக்கில்லை
அம்மா...!

என்ன
எழுதினாலும்
எழுத்துக்கள்
அத்தனையுமே
அழகாய்
தெரிகிறது
உன்னை
எழுதும் போது
மட்டுமே
அம்மா...!

சொல்லால்,
செயலால்,
எல்லா
பொழுதும் நீ
உள்ளவரை,
உள்ளம்
களிப்பில்
கொள்ளை
கொள்ளுமே
அம்மா....!

அன்னையர்
தினத்தில்
மட்டுமே
நினைவில் வர
நீ என்ன வெறும்
நினைவுகளா!
இறப்பு வரை
தினம் தினம்
சுவாசிக்கும்
உயிரன்றோ!!!

— — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

எல்லாம் தெரிந்திருந்தும் சில சந்தர்ப்பங்களில் ஒன்றுமே தெரியாதது போல் நடிக்க வேண்டி இருக்கிறது. உண்மையிலேயே ஒன்றுமே தெரியாமல் இருக்கும் போது நன்றாக நடிக்கிறாய் என்று பெயர் வாங்க வேண்டியும் இருக்கிறது



மலரிதழ்களின்
மறுபக்க
மடல்களில்
மறைந்திருக்கும்
நரம்புகளைப்போல,

விழிக்குப்
பின்னால் இருக்கும்
கனவுகளை
கண்கள்
அறியாதது போல,

தெளிவாக
புலப்படுத்தியும்
புரியப்படாமலே இருக்கும்
உணரப்படாத
உண்மைகளைப்போல,

நெஞ்சறையே
கருவறையாய் தன்
கருவுக்கே
கலங்கரையாய்
கண்ணிமையாய்,


தோளிரண்டையே
தொட்டிலாக்கி
அர்ப்பணிக்கும் சில
அப்பாக்களின்
ஆதங்கமெல்லாம்,

இறைவா!!!
ஒருமுறையேனும்
கருவறையை
கடனுக்காகவேனும்
தரமாட்டாயா!!!

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

என்ன தான் இறுக்கமான முடிவுகளை எடுத்து திடமாக இருந்தாலும் சில சூழ்நிலைகள் அவற்றை மிகச் சுலபமாக தகர்த்துவிடுகிறது.
அப்படியானால் மனதை வழிநடத்துவது சூழ்நிலைகளா...?
இல்லை சூழ்நிலைகளுக்கேற்ப தான் மனது செயல்படுகிறதா..?

ஆசைகள் மட்டும் தான் காதல் என்றால்
காதல் கூட வெறும் பொம்மை தான்.



சதியாய் வரும்
விதியைக்கூட
சரிநிகராய்
சவாலிட்டு
சரித்திரம் படைப்பாள்.

நதியே
திரண்டு வரினும்
சிரத்தில் ஏற்றி நீ
சிகரம் தொட
பெருக்கையும் கடப்பாள்.

வயதேறி நீ
வாலிபம் பெற,
வயதாகி அவள்
வடிவம் மாற
வலுவிழந்தாள் பெற்றவள்.

அப்போதைய
அவள் கனவு
இப்போதைய
உன் விருது.

வந்தவளிடம்
சொல்கிறாய்! தன்
சாதனை
விருது விழாவுக்கு,

சேலைகட்டி
சாலையில் நடக்க
சிரமப்படும்
அம்மாவை
அழைத்துவர
அனுமதி இல்லை என்று.

உனக்கெங்கே
தெரியப்போகிறது நீ
சாதிக்க வேண்டுமென
சேலை நனைய
சாக்கடையையும் கடந்தவள்
அவள் தான் என்று.

---

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

பிறரது வார்த்தை சர்க்கரைப்போல் இனிப்பானது தான்
அளவாக உள் வாங்கினால் சுவை.
அதிகமாக உள்வாங்கினால் நோய்.



தையலிவள் மெய்யழகும்,
போர்வை மூடிய
பார்க்காத பொய்யழகும்,
கதிர்பரவும் விழியிரண்டும்,
கழுத்து மணி மாலையும்,
பொட்டிட்ட நுதல்
புருவப்பாம்பிரண்டும்,
தடி இடை சுரண்டும்
தளிர் கூந்தல்
பின்னழகு பின்னலதும்
பேரழகு.

முறுவலின் மொழி
மௌனத்தாலும்,
காதலின் மொழி
மந்திரத்தாலும்,
நெஞ்சனை அமர்ந்த
பஞ்சணைக்காரியவள்
உதிர்க்காமல் உதிரும்
காந்தப்புன்னகை
உதட்டுக்குள் ஒழிந்த
ஒய்யார நகைப்பது
மெய்யான அழகு.

திருக்கடல் கடந்து
புரவித்திருவுடல் ஏறி,
வெற்றிக்கேடயம்
சிரசில் பூட்டி,
முரசொலி முழங்க,தன்
பருவத்து நாயகன்
அணிதிரள் வேந்தர்களை
களம் வென்ற களிப்பில்,தன்
கரம் பற்ற வருவான் என்ற
சிலை இவள் தன்னம்பிக்கை
தனியழகு.

— — — — — — — —

வாழ்வியல் வாசகம்.
“திருமதி சுஜி ரமேஷ்'

உன் வாழ்நாளில் ஒரு தடவை
நீ உண்மையாக சந்தோசப்பட்ட ஒரு சம்பவத்தை
அடிக்கடி எண்ணிக்கொள். அது பல தடவை
நீ காயப்பட்ட தருணங்களை மறக்கடிக்கும்.

— — — — — — — — —

கிட்ட இருக்கும் சந்தோசங்களை
தொட்டுப்பார்க்கக்கூட மறந்து விட்டு
எட்ட இருக்கும் ஏமாற்றங்களைத்தான்
எட்டிப்பிடிக்க நினைக்கிறோம்.



இளமை சுமந்து,
இருப்பிடம் பெயர்ந்து
இருள் கிழித்து நழுவிய என்
இதய நிலவே!!

எல்லோரது கவிதைக்கும்
கருவானாய்,ஆனால்
உன் கதையின்
“கரு“ அது
கருகிய கதையாகி,
வாழ்க்கையின் வழக்கில்
கைமாறிய சாட்சியங்களால்
தவறான தீர்ப்பானது.

உயிர் காலம் அளந்து,
உணர்வோடு போராடும்,
ஓராயிரம் கனவுகளை
ஒழித்து மறைத்து
மௌனங்களோடு உன்
வலிகளை விழுங்கினாலும்,
வெளிச்சம் தருவதில்
சளைக்காத நிலவே!

சொல்லால் வந்தது
சொல்ல வராமல்,
உள்ளக்கிடங்கில்
மெல்லப்புதைந்த
பல்லாயிரம் எண்ணங்கள்,
மொழிபெயர்ப்பாகாமலே
முடங்கிப்போகிறது உன்
முகம் பார்க்கும் போது!!

எட்டா தொலைவானாலும்
எட்டும் தூரம் தான் நீ என
கட்டளையிடும் மனதை
தட்டிக்கேட்கிறேன்
வெட்கம் தொலைத்த
முதுமையிலும்,இந்த
இளைய நிலா என்
இதயம் தொடாதா என்று!!

இருப்பது பல நாள்
இறப்பது ஒருநாள்
இரக்கம் கொண்டு
இறங்கி வந்து
பட்டொளி பாய்ச்சி
பாதை தொட்டு என்
பயணம் தொடரும்
பருவத்து பால் நிலவே!!

நிஜமாய் நிழலாய்
நீ என் நினைவாய்
நீங்கா நிலவானாய்,
நடப்பது நடக்கட்டும்!
கடவுளின் கணக்கெடுப்பில்
கடக்கும் நொடிகளுக்கு
உயிர் இருக்குமானால் நம்
உறவும் நீடிக்கும்.



முறித்துப்போட்ட
அரும்பொன்று
வியர்த்துப்போய்
வீதியோரத்
தெருவில்.

தன் நிலை மறந்து
மரத்துப்போன
உயிர் ஒன்று
உறங்கிக்கிடக்குது
மடியில்.

காய்ந்த வயிறும்,
வறண்ட நாவும்,
பிஞ்சுகளின்
பரிதாபங்கள்
கேள்விக்குறியில்,

சுமந்தவர்கள்
சபிக்கப்பட,
சிறுசுகள்
சிரம் அறுந்து
சாபத்தில்.

பாடப்புத்தகங்கள்
பள்ளிப்படிப்புகள் என
ஏழை இவள்
ஏட்டுக்கல்வியும்
எட்டாமல் போக,

நாட்டு
நடப்புகள்
காட்டு மிராண்டிகளாய்
நாட்களை நகர்த்தும்
நிலைதான் மாறுமா?

குற்றங்கள் களைந்து,
குழந்தைகள் மகிழ்ந்து
வாழ்வு நிமிரும் என்ற
மீழ்வு தான்
மீண்டும் வருமா?

கருங்கல்லில்
இருந்து கொண்டு
வருந்துகிறாள்.இவள்
வருங்காலம் தான்
விடையாகி விடியுமா?

— — — — — — — —

வாழ்வியல் வாசகம்.
"திருமதி சுஜி ரமேஷ்"

மன்னித்து விடு அது மகத்தான குணம்,ஆனால்
மன்னித்து விட்டது போல் நடிக்காதே
அது மகா துரோகம்.



தொழில் நுட்பமாம்,
தொடர் நவீனமாம்,
மாயைகளில்
மயங்குது உலகு.

பூனையை விரட்டிய
"எலி" இப்போது
பூலோகத்தையே
மிரட்டுகிறது.

இயல்பு நிலைகளை
கடித்து,
யதார்த்தங்களைச்
சுரண்டி
அட்டகாசங்கள்
ஆர்ப்பாட்டங்கள்.

காவியத்தையே
கலங்கடித்து,
கடவுளையும்
கண் திறக்கவைத்த
கூந்தல் அழகு,

கொதி நீர் குளியலால்
கொத்தோடு கழன்று
திருப்பதி மொட்டையாகி,
பின் வழுக்கைக்கும்
நட்டுவைத்து,

ஆப்பரேசன்
அறுவைகளுக்கு
ரோபோக்கள் வந்து
வருத்தக்காரனையும்
விழி பிதுங்க விட்டு,

கருவிகளை இயக்கி,
மாசுகளை கக்கி,
பசுமைகளை கருக்கி,
பூமாதேவியையும்
புலம்ப வைத்து,

இல்லத்தரசிகளுக்கு
எல்லாவற்றையும்
சுலபமாக்கி
"இடை" இல்லா
பீப்பாவாக்கி,
என்னென்னவோ
எல்லாம் நடக்குது.

ஆடைகளைக்
கழுவுகிறாய்!!
பாத்திரங்களைக்
கழுவுகிறாய்!!

ஓ... நவீனமே
மானுடத்தின்
மனதைக்கழுவும்
மார்க்கமுண்டா சொல்???



சாயும் அந்தி
சாயம் வெளுக்குது,
காயும் கதிரவன்
களைத்து ஒதுங்குது,
கண்மணியே கண்ணுறங்கு.

மாலை இருளும்
மெல்லப்படருது,
சோலை மலர்கள்
மௌனம் கொள்ளுது,
மாங்கனியே கண்ணுறங்கு.

தவழும் சிலையே என்
தலைமுறைக்கருவே,
சிணுங்கிக்குலுங்கும்
சிங்காரச்சிமிழே,
சித்திரமே கண்ணுறங்கு.

பால் வயிறு சுற்றிய
அரைஞாண் கயிறு,
கூர் மூக்கு நுனியில்
தார் நிறப்புள்ளி,


பொன்வண்டு கண்கள்,
பொங்கிய கன்னங்கள்,
பூத்தாய் மடியில்
சேர்த்தாய் விடியல்
சிற்பமே கண்ணுறங்கு.

தத்தும் உன் நடை
தரையை முத்தமிட,
பிள்ளை மொழி என்
உயிரை முத்தமிட.

விளக்கொளியில்
பகல் நிலவாய்
பளிச்சிடும்
பைங்கிளியே.
பசுந்தளிரே கண்ணுறங்கு.

நூல் சேலை
தொட்டில் கட்டி,
தானாகத்தேடி
மெட்டு கட்டி
சீராட்டிப்பாடுகிறேன்
சீக்கிரமே கண்ணுறங்கு.

நான் பாட வக்கில்லை
தாலாட்டும் உனக்கில்லை
நீ என்ற உறவுமில்லை
நான் ஒன்றும் தாயுமில்லை
கனவோடு பாடுகிறேன்
காற்றேனும் உறங்கட்டுமே.



ஆதாம் ஏவாளின்
ஆரம்ப ஒத்திகைக்கான
அரங்கேற்றச்சின்னம்.

வாழ்க்கைச்சுவரில்
வரையப்படும்
முதலாவது சித்திரம்.

பெண்மையின் ஏட்டில்
ஆண்மை இடும்
அழகிய கையொப்பம்.

குடும்பக்கோவிலை
கும்பிட வைக்கும்
கோயில் கலசம்.

போர் வீரனையும்
கோழையாக்கும்
நினைவுப்பரிசு.

மகிழ்ச்சிக்களிப்பில்
மையம் தொடும்
ஆனந்த அழைப்பிதழ்.

துன்பக்கதவை
தட்டித்திறக்கும்
இரகசியத்திறப்பு.

தாய்மை என்பதை
வாய்மை படுத்தும்
கௌரவச்சான்றிதழ்.

— — — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

சந்தர்ப்பங்கள் வரவில்லையே என்று காத்திருப்பவன்
காலத்தை நொந்து கொள்கிறான்,மாறாக
சந்தர்ப்பங்களையே உருவாக்குபவன்
காலத்தையே வென்று வாழ்கிறான்.

— — — — — — — —

கொடுக்கப்படும் போது காரணம் தெரியாமலும்,
பெறப்படும் போது கபடம் அறியாமலும்
உணரப்படுவது தான் உண்மை அன்பின் வெளிப்பாடு.



இதயம் கிழித்து,
விதையாய் விழுந்து,
உயிரைத்துளைத்து,
முளைத்த உறவே!

மூடு பனிக்குள்
முகம் மறைத்த,
பனித்துகள்களாய் உன்
அன்பின் தூறல்கள்.

தடை உடைத்து,
மடை திறந்து,
அடை மழையில்
உடல் மூழ்கும்.

பெருங்களிப்பில்
பெருக்கெடுத்த,
பெருவெள்ளம் உன்
அன்புள்ளம்.

நீரோடை
பூரிப்பு, உன்
புன்னகையே
பரிசளிப்பு.

கண் வெட்டில்
மின்னல் வெடித்து,
இடி இடித்து
கொட்டும் மழை
முற்றாய் நனைக்க

துவட்டாத
துப்பட்டாவாய் நீ
தூர இருக்கும் போது என்
ஈரத்துணியும்
தீப்பிடித்துக்கொள்கிறதே!!

---

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

வழிகாட்டு வழிபடுத்து அது
நற்செயலின் உச்சம்.
உன்னால் உயர்ந்தவர்களை
எப்போதும் ஆசீர்வதி. ஆனால் ஒரு போதும்
சன்மானத்துக்காக காத்திருக்காதே.



நாம் கை பிடித்து
உரசிப்போன
காதல் பாதையும்,நீ
கைகோர்த்து
ஊர்வலம் போன
கல்யாண பாதையும்
இதுதான்.

விட முடியா
பிணைப்பில்,
உயிராய் நீ
இணைந்தது
உண்மைதான்.

தொட முடியா
தொலைவில்,
நிலவாய் நீ
தெரிவதும்
உண்மைதான்.

ஒருமனதாய்
ஒதுங்கினாலும்,
மனதார உனை
மறந்தேன்
என்பது மட்டும்
உண்மையான
பொய்தான்.

புரிதல் தான்
காதல். நம்
பிரிதலுக்கும்
காரணம் அதே
புரிதல் தான்.

அழுது அழுது
விடைபெற்றுக்
கொண்ட போது இப்
புழுதிப்பாதையில்
நழுவி விழுந்த நம்
அழகிய காதல் மலர்,

அழுகிய மலராய்
காலடிகள் பட்டு
கசங்கப்போகிறதே என்ற
தவிப்பைத்தவிர என்
காத்திருப்பு
உனக்கானதல்ல.

---

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

திருப்தி உன்னை மனிதனாக்கும்
விரக்தி உன்னை மயானம் சேர்க்கும்.



அகிலத்தின்
அழகிய பரிசு அன்பு,
அனைவரையும்
ஆட்டிப்படைப்பது
அதே அன்பு.

பலரையும்
பலப்படுத்துவது அன்பு,
பாசம் காட்டி
பலவீனமாக்குவதும்
அதே அன்பு.

அரும்பாடு பட்டு
வெல்வது அன்பு,
அவமானங்களுக்குள்
அல்லல் படுவதும்
அதே அன்பு.

தேடும் போது
கிடைக்காதது அன்பு,
தேவைகள் தீர்ந்த பின்
தேவையற்ற பொருளாவதும்
அதே அன்பு.

நம்பிக்கைக்கு
உரித்தானது அன்பு,
நம்பியவர்களை
உதறிவிடுவதும்
அதே அன்பு.

வாய்பேச விடாமல்
தடுப்பது அன்பு,
வரம்புகள் மீறி
வாங்கிக்கட்டிக்கொள்வதும்
அதே அன்பு.

குறையே தெரியாமல்
இருப்பது அன்பு,
கொடுக்கா விட்டால்
குறையாய் தெரிவதும்
அதே அன்பு.

கல்லையும்
கரைய வைப்பது அன்பு,
சில மனங்களை
கல்லாக்கி விடுவதும்
அதே அன்பு.

புரிதலுக்காக
பாடுபடுவது தான் அன்பு,
இன்றுவரை
புரியப்படாமலே இருப்பதும்
அதே அன்பு.



காடு மலை கடந்து,
காற்று மழை மறந்து,
கால் கடுக்க உழைத்து,எனைக்
கரையேற்றிய
காவியத்தாயே!!

மாலையிட்டவனையும்
"மாலைக்கண்"மறைத்து
மண் அள்ளிக்கொள்ள,
மூடிய பனிக்குள் மலராய்
மூச்சிறைத்துப்போனாய்.

ஒரு சாண் வயிறும்
ஒழுங்காக நிறையாமல்,
ஓயாத உழைப்பில் நீ
ஓட்டிய நாட்களை
ஒருமுறை சிந்திக்கிறேன்,

காலம் கடந்து
ஆளான பின்பு
ஞானம் பிறந்து,உனக்கு
தங்கக்கொலுசோடு
கடல் கடந்து வந்தேன் நீ
கால்களை இழந்த பின்பு




மதி மயங்கி
செவி அறுந்து
மங்கல் பார்வை
மிஞ்சி இருக்க,

தூளியிட்டுத்
தாலாட்டிய அந்த
தொட்டில் உறவுக்காய்
ஒட்டியிருக்கும் உயிர்.

வேரோடிப்போன
ஆறாத வடுக்கள்,
தீயாய் கருகிய
தீராத கனவுகள்.

நீ பறந்து சென்ற
ஆகாய தேசம்
எனக்கு நினைவிலில்லை,
நீ குடியிருந்த இந்த
கருவறை விலாசம்
உனக்கேன் தெரியவில்லை.

ஒரு முறை வா மகனே
மறு நொடி இறக்கிறேன்.



சாதாரன மனிதனையும்
சான்றோன் ஆக்குகிறது கல்வி.
சகாப்தங்கள் பல தாண்டியும்.
சரித்திரம் படைப்பது கல்வி.

மகான்களும் மாமேதைகளும்
மனிதனின் மூளையை
தட்டி எழுப்பியது
அனுபவக்கல்வியால்,

மானுடத்தின் மார்க்கங்கள்
பட்டைத்தீட்டப்பட்டதும்,
கட்டி எழுப்பப்பட்டதும்
ஏட்டுக்கல்வியால்.

வறுமையின் போர்வைக்குள்
திறமைகள் மூடப்படுவதா...:?
ஏழ்மையின் கடலுக்குள்
ஏழையின் கல்வி மூழ்கடிக்கப்படுவதா!!

ஆராதனை

விதைக்கப்படாமலே
கருகிக்காய்ந்து
கருவிலே பிடுங்கப்படுகிறது
கல்வியின் வேர்கள்.

பித்தம் பிடித்து பேதமையாகி,
நித்தம் நொந்து வேதனையாகி -இங்கு
பெத்த வயிறுகள் பதறுவது
பெற்ற பிள்ளைகளின் கல்விக்காவே.

சிறார்களின் வருங்காலத்தை
சீர்தூக்கிப்பார்த்து - நம்
ஆடம்ரபங்களிலிருந்து
அணுவளவைப்பகிர்ந்து,

கையளவு கருணை கூர்ந்து -அது
கடலளவு காணிக்கையாகும்
தர்மம் செய்வோம்
தார்மீகம் காப்போம்.

வறிய மாணவர்களின்
அறிவுக்கண்ணைத்திறக்கும்
அறநெறியில் மறத்தமிழனாய்
மானம் காப்போம்.

---

வாழ்வியல் வாசகம்
“திருமதி சுஜி ரமேஷ்‘

நாம் எல்லோருமே அறிவாளிகள் தான்
அவசரத்தில் தான் முட்டாள்களாகிவிடுகிறோம்.



மலையக மண்ணின்
மறையா மாந்தரினம்,
மாய்ந்து, மேய்ந்து உழைத்தாலும்
வீழ்ந்து போகாத மனித இனம்.

தேகம் தேய்க்கும்
தேயிலை தேவதைகள்.
நேற்றைய தேடல்களின்
நாளைய தேவைகள்.

வீராப்பு காட்டாத
மாராப்புச்சொந்தங்கள்,
தீராத சோதனையிலும்
தீர்வுகளின் சுவாசங்கள்.

பசுமையைத்தழுவும்
பாசத்தின் கரங்கள்,
பாமர வர்க்கத்தின்
பாவப்படைப்புகள்.

மழை மின்னல்
காற்று குளிர்
வெய்யில் பனியிலும்
பூத்திருக்கும் காளான்கள்.

ஒப்பனை இட்டுக்கொள்ளாத
கொங்கானி முக்காடுகள்,
கங்காணி விரட்டியடிக்கும்
முந்தானை ரோஜாக்கள்.

தொப்பை முதலாளியும்,
தொப்பி துறையும்
சொகுசாய் சீட்டாட, உழைக்கும்
தேசத்தின் தொழிலாளர்கள்.

தினக்கூலிக்காய் கூக்குரலிட்டு
தினந்தோறும் ஆரப்பரிப்புகள்,
கூப்பாடு போடுபவர்களை நம்பி-கை
கூப்பியே இவர்களது நாட்கள்.

வாக்கெடுப்புகளுக்கு மட்டுமே
வாக்குக்கொடுக்கப்பட்டாலும்,
வார்த்தை தவறுபவர்களையும்
வார்த்தெடுக்கும் குவளையர்கள்.

ஓராயிரம் ஒத்திகைகள் பார்த்தும்
ஒழித்து மறைத்த படி,
அரங்கேறாமல் போன வாழ்வின்
அத்தனை நாடகங்களையும்,

நடிக்கத்தெரியாமல்
நிஜமாய் தோற்றாலும்
நகலாய் பிரதிபலிக்காத
அசலான அழகு முகங்கள்.



மிருதுவான நம்
சருகுத்தோட்டத்தில்
நெருப்பை எறிந்து
கருக்கியது யாரோ!!!

பொசுங்கிப்போன
இதயத்தோடு
விதியே என
சமாதியாகிப்போனேன்!!!

அறுந்து போன நம்
ஆனந்தங்களின்
வலியை விளக்க
மொழி தான் ஏது!!!

உறவே,உன்
திருமுகம் தெரியவே
இனி பிரிவேது என
தைரியமாக,

கல்லறை பிளந்து
உறக்கம் களைந்து
உனக்காக எழுந்து
கவலை மறந்து,

கட்டியணைக்கிறேன்
காதலனே,இதுவும்
கானலாய் மறையப்போகும்
கனவென்பது தெரியாமல்.

---

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்'

நமக்கு எத்தனை பேர் உறவாக இருந்தாலும்
யார் நம்மை உண்மையான உறவாக
ஏற்றுக்கொண்டார்கள்
என்பதை உணராத வரை உறவுக்கும் உயிரில்லை.

---

அனுபவங்கள் ஒன்றும் அவமானங்கள் அல்ல,
அவை அடையாளங்கள்.
பிறரோடு பகிரப்படும் போது தான் உணரப்படுகிறது.



குடும்பத்தின்
கடன் தீர்க்க
பாதி வயது
கடந்தவனுக்கு
தாரமாகி,

விளக்கில்லா இருளில்
விதியின் பாதையில்
மீதி வயதையும்
கடக்கிறாள்
விதவையாகி.

பட்டுப்போன
மொட்டை மரத்தின்
வேரை பிடுங்கியா!
வீரத்தைக்காட்டுவது?

வெந்து பொசுங்கி
அவிந்த காயத்தில்
நெருப்பைக்கொட்டியா!
வித்தையைக்காட்டுவது?

## ஆராதனை

விரல்களை நறுக்கி
தந்திகளை அறுத்து
மீட்டச்சொன்னால்
வீணையும் அழாதோ!!

வேண்டாம்
விட்டு விடு.
மழையைத்தேடும்
வறண்ட நிலம் தான்
அவள்.ஆனால்,

எருதுகள்
மேய்ந்து விட்டுப்
போவதற்கு
அவள் ஒன்றும்
சேற்று நிலமல்ல.

---

## வாழ்வியல் வாசகம்

"திருமதி சுஜி ரமேஷ்'

நல்லவனா கெட்டவனா,
விரோதியா துரோகியா,
சந்தர்ப்பவாதியா சாமர்த்தியவாதியா,
தியாகியா தெய்வமா நீ யார்?
உன் செயல்களே அதை தீர்மானிக்கின்றது.



ஏழைக்குடிசையில்
ஓலைகள் உரச,
ஓரம் கிழிந்த
ஓட்டைப்பாயில்,

சாணமிட்டத்
திண்ணையில்
வானம் பார்த்து
வாடை காற்று பட,

இருளைத்
தலையணையாக்கி,
நிலவைப்
போர்வையாக்கி,

ஓட்டைக்கூரையில்
ஒழுகல் நனைத்தாலும்
ஒய்யாரமாய்
உறங்கிய சுகம்,

## ஆராதனை

மாடிவீட்டு
மஞ்சத்தில்
பொய்யாய்
போனதே!!!

கடதாசி மடித்து
காத்தாடி பிடித்து
ஆத்தாவ மடக்கி
காத்தாட விளையாட,

சில்லு தேய்ந்த
சைக்கிள் சவாரியில்
ஆத்தங்கரை வரை போனாலும்,அது
"அமெரிக்கா" போன சுகம்.

ஓசி காற்றை
"ஏசி" என வாங்கி,
காசும் பொருளும்,
கூலிங்கிளாசும்.

பிட்டும் பால்சொதியும்
பிச்சை உணவாகி,
பிட்ஸா மட்டுமே
பணக்காரன் நிலையாகி,

செரிமானக்கோளாறுக்கே
சைக்கிள் துணையாக,
மாருதிக்கார்கள்
மனிதத்தை அளக்கும்,

பந்தா வாழ்வு
பகட்டாய் தெரியுதே!!
பங்களா வீட்டில்
பைத்தியம் பிடிக்குதே!!!



நீரில்லா குளத்தில்
மீன்களைத்தேடி,
காற்றில்லா தேசத்தில்
சுவாசத்தை தேடி,
அலைந்து திரியும்
அறியாமைகள்.

மழைக்காலத்தில் மையூறி
நனைந்து நசநசத்து,
வாசிக்கப்பட
முடியாமல் போன
ஈர நினைவுகளின்
வாசகங்களாய்,

வெளிப்படுத்தாமலே
புலம்பல்களுக்குள்
மௌனங்களாக
அழிந்துபோகின்றது
தெரிவிக்கப்படாத
ஆசைகள்.

ஆராதனை

ஊமையின் விரல்கள்
கிறுக்கித்தள்ளும்
உணர்வுள்ள
சித்திரங்களைப்போல,
உயிர்ப்பான உண்மைகள்
அவரவர்க்குள்.

உறவென்ற
பொருள் கொண்டு,
உன்னோடு
உரிமை கொண்டு,
ஒன்றான
நாட்களுண்டு. அதில்
உயிராய் நீ
கலந்ததுண்டு.

ஆறுதலுக்கு
அரவணைப்பு தர
அர்த்தங்கள் தேடும்
அவசியம் எதற்கு.
கூடித்தழுவும் போது
கோடி மகிழ்வு தரும்
குழந்தைகளாகவே
குதூகலிப்போம் வா.

---

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

உன் அறிவை மட்டும் எப்போதும்
முட்டாள்கள் எடைபோடவோ விலைபேசவோ
விட்டுவிடாதே.



உண்மையின் பொருள் தேடி,
ஒவ்வொன்றாய் மனம் நாடி,
நடக்கின்ற நாட்களோடு
கடக்கின்றது காலங்கள்.

பொறுப்புகள்,கடமைகள் என்று
பொதுப்பணிகளில் மனங்கொண்டு
வாழ்வதில் தான் நிறைவுண்டு.
வழியும் அதுவே புகழுண்டு.

அடையாளங்கள் மாறினாலும்
அனுபவங்களை மீட்டிப்பார்க்கையில்,
அறிந்திட ஆயிரங்களுண்டு அதை
அடைந்திட இன்னும் ஆயுளும் உண்டு.

முடிவுகளைத்தொடுவதற்கும்,
முற்றுப்புள்ளிகளை இடுவதற்கும்,
கற்றுக்கொடுக்கும் வாழ்வின் பாடங்கள்
பற்று கொண்டால் கிடைக்கும்
கோடி அர்த்தங்கள்.



கனவுகளில் பவனிவந்த
கனிவான நினைவுகள்,
கைகூடிய கற்பனைகள்,
கல்யாண மணமகன்
கதிரவன் அவனை
கண்விழிக்க வைத்தது.

தாமதமாய்
நீராடி முடித்த
வானத்து மணமகளை
துவட்டிவிட
ஓடியலையுது
துப்பட்டா மேகங்கள்.

பஞ்சணைக்கு அனுப்பி
பள்ளி கொள்ள வைக்க
அந்திப்பொழுதுக்கு
அரை நாளிகை இருக்க
அலங்காரங்களோடு
கடல் அலைகள்.



விவாதமாக இருந்தால்
வாதிடலாம்.
வியாபாரமாய் இருந்தால்
விலை பேசலாம்.

பிறர் பார்வைக்கு உயிராக,
உள் உணர்வுக்கு கரவாக,
தரமற்ற அத்திவாரத்தில்
உறவுக்கு மாளிகையா!

நிமிடங்களுக்கு தீயிட்டு
நேரங்களை பொசுக்கும்
தீப்பந்துகளோடு
சகவாசம் வேண்டாம்.

விசுவாசமில்லாமல்
விச நேசம் பாய்ச்சும்
ஊசிகள் தைத்த
உறவுச்சீலை எதற்காக!

ஆராதனை

தண்ணீர் மேல்
இரும்புக்கப்பல் சாத்தியமாகலாம்
தண்ணீர் மேல்
இரும்புத்துண்டு சாத்தியப்படுமா!

பசிக்காத போது கிடைக்காத
அருஞ்சுவை விருந்து அது
புசித்திடும் போது
கசந்திடும் மருந்து.

இடிந்த மேடையில்
இல்லாத கூட்டத்தில்
உடைந்த ஒலிபெருக்கியில்
ஊருக்கு உபதேசம்.

– – – – – – – –

வாழ்வியல் வாசகம்

"திருமதி சுஜி ரமேஷ்'

பொய் சொல்லி சுலபமாக தப்பித்துக்கொள்கிறோம்,
உண்மையை பேசித்தான் அநேகமாக அவமானப்படுகிறோம்.

– – – – – – –

பொறாண்மைகளால் பொசுக்கப்பட முடியாத,
எரிச்சல்களால் எரியூட்டப்பட முடியாத
ஒரே ஒரு சக்தி வாய்ந்த பொருள் அது உன் திறமை.




இந்திய அமைதிப்படைக்கு எதிராக
முந்திக்கொண்டு முழக்கத்தோடு
போர்க்குரலிட்ட தாயகதேசத்தின்
அறத்தாய் அன்னை பூபதி.

வாக்குறுதிகளுக்காய்
கூக்குரலிட்டு ஈழம் ஈடேற
உண்ணாவிரதம் இருந்து
உயிர் நீத்த உத்தமி.

சமாதானங்கள்
சாபக்கேடானதால்
சமாதியாகிப்போன
சரித்திர தேவதை

பத்துப்பிள்ளைகளின்
பாசத்தாயிவள்,
முப்பது நாளிகைகள்
பட்டினி விரதம்.

மட்டக்களப்பில்
போராடிக்களைத்து
வீராப்போடு விடைபெற்ற
பார் போற்றும் வீரத்தாய்.


கொள்கைகளும் உன்
கோரிக்கைகளும்,சில
கள்வர்களின் காதுகளுக்கு
கொள்ளாமல் போனதால்,

சொல்லின் தெளிவால்
கல்லறைக்குள்ளும்
கடவுளாய் வாழும்
காவியத்தலைவி.

— — — — — — — —

வாழ்வியல் வாசகம்
“திருமதி சுஜி ரமேஷ்“

கடவுள் நம்பிக்கை என்பது
ஒரு தைரியம் மட்டுமே
தன்னம்பிக்கையால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளால் தான்
பல வெற்றிகள் குவிக்கப்படுகின்றன.



கிளைகள்
தறிக்கப்பட்ட
மொட்டை மரங்களாய்,
பசுமை கருகிய
பாலைவனங்களாய்,

வெறிச்சோடிப்போன
வெற்று வாழ்க்கையோடு
தாயக தேசத்தில் நம்
தாய்மார்கள்.

வெந்துபோன உணர்வுகளை
நொந்து சுமந்த படி
அங்கம் தளர்ந்தாலும்
அன்றாடம் காத்திருப்பு.

தேசம் கடந்து, கடமைக்காய்
தொலைபேசியில் தேற்றும் தம்
பிள்ளைகளுக்கு இன்னும்
தொல்லையாகி விட்ட தவிப்பு.

வாழ்ந்தது போதும்
எடுத்துக்கொள் இறைவா! என
நாளாந்த வேண்டுதல்களோடு
நாட்களின் நகர்வு.

வாசல் கோலங்களின்
வடிவம் மாறவில்லை,
வாழ்வின் வண்ணங்களை
அவலங்கள் மாற்றியதே!!

சிரியா குண்டுகள்
சிதைத்துவிட்டதைப்போல,
சிதையுண்ட இதயத்தோடு
சிரிப்பும் புதையுண்டதே.

— — — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

கோபம் வார்த்தைகளின் தரத்தை இழக்க வைக்கிறது.
நிதானம் வார்த்தைகளுக்கு
மதிப்பையும் மரியாதையையும்
தேடிக்கொடுக்கிறது.

— — — — — — — —

அன்பு எங்கு சாகடிக்கப் படுகிறது தெரியுமா? அது சரியான இடத்தில் சமர்ப்பிக்கப்படாத போதுதான்.



பிரபஞ்ச கோலத்தில்,
பிரமனவன் கோணத்தில்,
பிரமிக்கின்ற பூரிப்பில்
பெறற்கரிய அரும்படைப்பாய்
பிறப்பெடுத்த பெண் எனும்
பெருந்தவமே!!!

கருப்பொருளாய்,
கருவுக்குள்ளும் உட்பொரு ளாய்,
உருபெற்று, தரம் குன்றா
கறைத்தீண்டா நிறைகாணும்
கருனைக்கடலே காவியமே!!!

முகத்திரை கிழித்து
விழித்திரை பகிர்ந்து,
அகமது குளிர்ந்திட
அறம் காத்து யுகம் போற்றும்
நிகரற்ற அகல்விளக்கே அற்புதமே!!!

சிவனோடு பார்வதியாய்
பார்வதி அவன் மீதியாய்,
மெய்யது கலந்திட்ட
வையகப்பிறப்பிதை
பொய்யுரை புகுத்திடல் பொருந்திடுமோ!!!

வரலாற்று ஏடுகள்
வடித்துச்செதுக்கிய
காவியப்பெண்களின்
கல்வெட்டு சாசனங்கள்
கல்லடி படுவதுவோ!!!

கருத்துப்புகழுரைகளும்,
கற்பனைக்கவியுருக்களும்,
கருவாய் ஏற்று நம்
உணர்வாய் பதிந்த
ஒப்பற்ற பெருமைகள்
தப்பாய் போவதுவோ!!!

ஏழ்பிறப்பும் ஏற்றம்பெறும்
பெண்ணின் படைப்பில்
பெருமை கொள்வோம்.
வரமாய் வந்து தர்மம் காக்கும்
பெண்ணின் படைப்பை
தவமாய்க்கொள்வோம்!!!

---

வாழ்வியல் வாசகம்
“திருமதி சுஜி ரமேஷ்“

தன்னம்பிக்கை என்ற நமது பலத்தை
ஆட்டிப்படைக்கும் அசுரன் தான்
பலவீனம் என்ற மூடநம்பிக்கை.




அமைதியின்
அடைக்கலம்.
அறிஞர்களின்
அருங்காட்சியகம்.

ஏவுகணைகள்
யாகம் நடத்த,
யமன்கள் கூடிய
சூனியப்பொழுதில்,

இலங்கை மண்ணின்
இனவாதம் எனும்
எழியவர்களின்
ஈனச்செயலால்,

சரித்திர கிரீடம்
சரிந்து கவிழ்ந்து
சாம்பல் தின்ற
சவமேடானது.

கல்விக்களஞ்சியத்தில்
கருகியது காவியங்கள்.
எண்ணைக்கொதிப்பில்
எரிந்தது இலக்கியங்கள்.

புராதனம் போற்றிய
புதையல் சாசனங்கள்.
புகை குடித்த
பொக்கிசங்களானது.

கருவறையை
குத்திக்கிழித்து,
கருவிழிக்குள்
எரிமலை ஊற்றி,

குழந்தைகளைக்
கொத்திக்குதறும்
கழுகுக்கூட்டங்களின்
அழுகள் திட்டம்.

இருந்த போது
சாதாரணமாக தெரிந்தது
எரிந்த பிறகு
சரித்திரமானது.

---

வாழ்வியல் வாசகம்

"திருமதி சுஜி ரமேஷ்"

எல்லா சந்தர்ப்பங்களிலும்
சரியான முடுவுகளை எடுக்க முடிவதில்லை ,
எல்லா முடிவுகளும் சரியானதாக இருக்கக் கூடிய
சந்தர்ப்பங்களும் சாதகமாக அமைந்துவிடுவதில்லை.



விந்தையானது வாழ்க்கைப்பந்தயம்
விசித்திரத்தேடலில்,
தினமும் நம் கவனம்.
உறவென்ற கோர்வைக்குள்
விதியென்ற போர்வைக்குள்
வழி மாறாத நியாயங்களுக்காக
வலிகள் சுமந்தபடி வாழ்வின் பயணம்.

இளமை ஒரு வரம் அது
துடிப்போடும் உயிர்ப்போடும் நகரட்டும்.
முதுமை ஒரு தவம் அது
அனுபவங்களாலும்,
அடையாளங்களாலும் நிறையட்டும்.
தவற விட்டால்,
திரும்பாது இளமை
நழுவ விட்டால்,
பெயர் சொல்லாது முதுமை.

காலம் கிழித்த கோட்டில்,
கரடு முரடான மேட்டில்,
கற்பனை சுமை மனதில்,
காரியம் கை கூடுமென்ற கனவில்,
நேர்வழி பாதைக்காய் காத்திருப்பு.
அது நல் வழியாக,
இருக்க வேண்டுமென்பதே தவிப்பு

நிகழ்காலம் நடத்திச்செல்ல,
எதிர்காலம் கூட்டிச்செல்ல,
கண்கள் இல்லாத கால்கள் இட்ட
கட்டளைப்படி அல்ல நம் பயணம்.
இலட்சியத்தேடல்களின்
குறிக்கோள்கள் இட்ட கோட்பாட்டின் படி
தடம் பதிக்க வேண்டுமென்பதே நம் சித்தம்.

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

உனக்கு தைரியம் வரவேண்டுமானால்
பல தடவை தோற்றுப்போ,
உனக்கு தெளிவு வர வேண்டுமானால்
பல தடவை அவமானப்படு,ஏனெனில்
தோற்றுப்போகும் போது தான் வெற்றியாளனும்,
அவமானப்படும் போது தான்
இலட்சியவாளனும் உருவாக்கப்படுகிறான்.

கனவுகளில் மட்டுமே தான் சில விடயங்கள்
நிறைவேறுகிறது என்ற முடிவுக்கு வந்துவிட்டோமானால்
நம்
பாதி வாழ்க்கை உறக்கத்திலேயே முடிந்து விடும்.



சிறகுகள் பூட்டிக்கொண்ட
இரும்புப் பறவை ஒன்று
பலநூறு மனிதர்களை
விழுங்கியபடி எழுந்து,பறந்து
அங்கு தரை இறங்கியது .

மேகங்களோடும், நட்சத்திரங்களோடும்
உறவாடிக்கொண்டே வந்த
ஊர்க்குருவி ஒன்று கூக்குரல் இடுகிறது.
நெடுந்தூரம் கடந்து வந்து விட்டோமே
"தேசத்தைத்தாண்டி"

மாதுளை விதைகளை அரைத்து,
மைதா மாவோடு கலந்து,
பாலும் பன்னீரும் சேர்த்துக்குழைத்த
செம்மண் சிலைகளாய்
வண்ண மயமான மனிதர்கள்.

ஐரோப்பிய நாடுகளில்
பூக்களுக்கு பெயர் போன அந்த
நெதர்லாந்து மண்ணின் மனிதர்கள்,
வரவேற்றுக்கொள்வதும்,
வழியனுப்பி வைப்பதும்

பரம்பரை பரம்பரையாக
மன்னராட்சி முறை.
முடிசூடிக்கொள்கிறது வாரிசுகள் .
வாசல் தேடி வரும் வேட்பாளர்கள் என்ற
தேர்தல் கால தொல்லை அங்கில்லை.

அரசியல் பூசல்கள்,
வறுமையின் விரிசல்கள் என்று
உயிருக்கு உத்தரவாதம் தேடி
நாடி வரும் மக்கள் தொகை இங்கு
நாளுக்கு நாள் அதிகம்.

உறவுகள் பிரிந்து,
உடைமைகள் துறந்து
கனவுகள் சுமந்து,
கடல் கடந்து வருபவர்களை
அரவணைக்கிறது வெளிநாடு.

இலங்கை மண்ணின்
வரலாற்றுப்பக்கங்களைப்
புரட்டிப்பார்க்கையில்,அத்தனையும்
கருப்பு அத்தியாயங்களாய்
வலித்த காவியங்கள்.

ஒரு பக்கத்தை போர் செதுக்க,
மறு பக்கத்தை வறுமை செதுக்க,
சொந்த மண் சுபீட்சமிழந்தது.
இலக்குகள் இடம் மாறி
இலங்கை தீபம் சுடர் இழந்தது.

அரசியல் சதுரங்கப்பகடைகள்
நாசுக்காய் நகர்த்தப்பட,
அதிகாரத்தாக்குதல்கள்
முரண்பட்ட தர்க்கங்கள் என
விலைபோனது நம் வீர மண்.

ஆராதனை

நிலவரங்கள் நிலைமாறி
நிறம் மாறியது மனிதம்.
தமிழரின் சுவாசங்கள்
சிவப்புச்சுவாலைக்குள்
அனலாய் கனன்றது.

உண்மைகள் பாதி பொய்கள் மீதி என
பதிவாக்கிக்கொண்ட வழக்குகளில்
நியாயமான காரணங்கள் என
நிரூபனமான தீர்ப்புகளால் நிம்மதியாய்
சுவாசிக்கிறார்கள் இங்கு பலர்.

அச்சுறுத்திய சூழல்கள்
மிச்சமிருக்கும் உயிரையும்
காவுகொள்ளாமல் காத்திட
அச்சத்துடன் புலம் பெயர்ந்தவர்கள்
ஏராளம் என்கிறது இங்குள்ள
தமிழர் வரலாறு.

— — — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்."

பணம் இல்லாத போது
உரிமையானவர்களும் ஒதுங்கிக்கொள்வார்கள்,
பணம் இருக்கும் போது
உரிமையில்லாதவர்களும் உறவாகிவிடுவார்கள்.



நரகத்தின்
கர்மப்பிறப்பென்று
தர்மத்தின் வடிவில்
தண்டனையா?

இல்லை

மோகத்தின் வேகத்தில்
விளைந்ததென
தாகம் தீர்ப்பதிலும்
கண்டனமா?

காற்றை கடித்து,
காகிதத்தை தின்று,
சேற்றில் உழன்று,
சோற்றுக்குத்தான்
சோகச்சீவியம்.

ஒப்பந்தத்திட்டம்
தப்பானால்
சப்பாத்தும்
சாப்பாட்டுத் தட்டம்.



எங்கோ சித்தரிக்கப்பட்டு,
எதற்காகவோ சிந்தனையாக்கப்பட்டு,
எப்படியோ சிதைக்கப்பட்டு விடும் சில
எண்ணற்ற நிதர்சனங்கள்
எமக்குள்ளே போராட்டங்கள்.

புள்ளிகளைத்தொலைத்த
கிறுக்கல் கோலங்களாய்
வருத்திக்கொண்டிருக்கும் சில
பொருத்தமற்ற வாழ்க்கைக்குறிப்புகள்
பொருள் தெரியாத சம்பவங்கள்.

அறியப்படாமலே
அமிழ்ந்து கிடக்கும்
அனுபவ முடிச்சுகளை
அவிழ்க்கும் முயற்சியில்
அறிவியல் மாற்றங்கள்.

பாறைக்குள்ளும் நீரூர வைத்து
ஈரப்படுத்தும் ஈர்ப்பான நகர்வுகளாய்
நீரோட்டமாய் சலசலக்கும்
நினைவலைகளோடு
வாழ்வியலின் அருவிகள்.

அகக்கறை நீக்கி மர்ம
முகத்திரை கிழித்து
உயிர்ப்பான உண்மைகளோடு
சிறுகதைகளாய் சித்தரிக்கப்படும்
பெருங்கதைதான் சிலரது வாழ்வு.


— — — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

தூக்கி விடுபவர்கள் எல்லோருமே உன்னை
உயரத்தில் நிறுத்தி அழகு பார்க்கப்போகிறார்கள் என்று

— — — — — — — —

தராதரம் பார்த்தால் உறவு நிலைக்காது
பலாபலன் பார்த்தால் பாசம் நிலைக்காது.



போர் குடித்து புலன் கருகி,
வறுமை கொடுமை வரவை துரத்த,
அறம் விதைத்து உரமிட்டு
சிரமுயர்ந்த மறத்தமிழா!!!

தாய்த்தேசம். அது நம்
"சரித்திர நாயகர்கள்"
சமர்புரிந்த சாம்ராஜ்யம்!!!
சீர்படுத்தி சரித்திரம் படை.

சாணக்கியங்களை வெல்லும்
சாமர்த்தியங்களைக்கற்று,
சூட்சுமங்களை பொசுக்கும்
விசித்திரம் தேடு.

வெறுமை சூழ்ந்து
வேற்றுமை நிமிர்ந்த
வெறியாட்ட வேட்கையில்
வெற்றி யார் கையில்?

ஆராதனை

வென்றவன் கோழை
தோற்றவன் வீரனா!!!
வெற்றுத்தாளில்
வெற்றியை எழுதாதே.

பந்தாடப்படுவதற்கு நம்
சுதந்திரம் ஒன்றும்
கால்பந்துமல்ல,
மைதானமும் அல்ல.

தமிழனின் எச்சங்களில்
உயிராய் மிச்சமிருக்கும்
உச்சிக்கம்பத்தின்
பச்சைக்கொடி அது.

திக்கெல்லாம் தெரிய
அச்சம் துறந்து
பறக்கவிடும் மார்க்கம் பார்.
நாளை நமதாக!!!

— — — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

அன்பு என்பது ஒரு குழந்தையின்
மனம் போல கபடமறியாதது,அது
காட்டப்படும் மனங்களைப்பொறுத்தே
தெய்வீகமாகவும் துரோகமாகவும் மாறுகிறது.



வறுமை வாழ்வை வெறுமையாக்கி
விடியலின் விளக்குகளை
விரோதங்கள் விழுங்க,
விடை காணும் போராட்டம்
போராய்த்துரத்த,
புண்ணாகி புலம் பெயர்ந்தோம்.

தேசம் கடந்த போதும்
தமிழ் சுவாசம் சுமந்த படி,
தாய் மண்ணை அள்ளிக்கொண்டு
விழுதுகளை வெட்டி விட்டு
விடைபெற்று வந்தோமே தவிர
வேர் அறுத்து வரவில்லை.

விழி இரண்டானாலும்
கண்ணீர் ஒன்று தானே!அதனால் தான்
நிலத்தில் எரிகின்ற போது
புலத்தில் கருகிப்போகிறோம்.
தாய்த்தேசம் உலுக்கப்படும் போது
வான் தேசத்திலும் கதறி அழுகின்றோம்.

மீள் எழ முடியாத
வாழ்வியல் பாடங்களையும்
தோளோடு சுமந்தபடி
மேகம் மிதந்து காற்றைக்கடந்து
விண் மீன்களை ஏந்தினாலும்
காலத்தின் பதிவுகளுக்குத்தானே தெரியும்
அகதியாய் வந்ததும்
அவமானங்களை வென்றதும்.

— — — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி சுஜி ரமேஷ்"

நம் வாழ்வின் கோலங்களுக்கு நாமே தான்
புள்ளிகளை இட்டுக் கொள்ளவேண்டும்
என்று இன்னொருவனை புள்ளியிட அனுமதிக்கிறோமோ
அன்றே அது அலங்கோலமாகிவிடும்.

— — — — — — — —

தக்க சமயத்தில் வெளிவராத உண்மைகளுக்கும்

பெயர், பின்நாளில் பொய்கள்தான்.




இணையத்தளங்கள்
இணையா தளங்களையும்
இணைத்தது
இணையற்ற பரிசு.

இடைவிடா
இணைப்பில்
இடை நழுவியதே
இவளது வாரிசு.

கைப்பையில்
இருக்க வேண்டிய
கைப்பேசி
கையணைப்பில்,

கையணைப்பில்
இருக்க வேண்டிய
கைக்குழந்தையோ
கைப்பையில்.


பார்த்தாயா
பரிதாபம்!!
பாரமானதே.
பிள்ளையும்.



என்ன எழுத!!
எப்படி எழுத!!
என்னை எழுதிய
உன்னை இனி
எதைக்கொண்டு
நான் எழுத!!

கண்ணைக்கிழித்து
கருவிழியால் வரைந்து,என்
இருதயப்பெட்டியில்
தபாலாய் மடிந்து,
என்னுள் விழுந்த உன்னை
படிக்கப்பார்க்கிறேன்
முடியவில்லை,

கண்ணாடியாய் வெடித்து
கன்னங்களில் வடிந்து
கண்ணீராய்க்கரையும் உன்
எண்ண ஓடையை
என்னிடம் இருந்து
அழித்துவிடப்பார்க்கிறேன்
அதுவும் முடியவில்லை!!!



மொழி தந்த தமிழ் பற்றில்
ஒளி தந்த குல பற்றில்
புல மண்ணில் தளம் காண நாம்.....

நிலம் கொடுத்த வீரத்தில்
மடை உடைத்து வடம் பிடித்து கூடுவோம்......

கூடுவோம்..... கூடுவோம்......

சொந்தம் கூடியே
சிந்து பாடுவோம்.
வென்று காட்டவே நாம்
ஒன்று கூடுவோம்.

ஐ. நா மன்றத்து முன்றலிலே
ஐயமற்ற தாயகத்து சொந்தமென
பொய்களற்ற பொருள் தேடி சங்கமித்தது.

ஜென்மம் ஒன்றையே..... ஜெயம்
பெற்றதாக்குவோம்.
வென்று காட்டவே நாம்
ஒன்று கூடுவோம்.

செங்கோலும் செந்நிறமாய்
செந்தணலில் வெந்தாலும்
மங்கிடுமா.....நம் மானமது.

பண்பாடு பூத்த மண்ணை
புண்ணாக்கும் போதை வர
பொங்கிடுமே.... தன் மானமது.

காட்டடா..... நம் கோரிக்கை மன
சாட்சியே.....இனி காணிக்கை.
ஏற்றடா...... ..ஈழ தீபத்தை
மீட்சியே.......இனி நம்பிக்கை.

ஏற்றம் என்ற ஏணியில்
வீற்றிருக்கும் எம் தமிழ்
மாற்றம் தேடி மார்க்கம் நாடி
மாலை சூடும் மானிடா

எங்கள் மொழி வாழட்டும்.
என்ற ஒலி முழங்கட்டும்.
எங்கும் தமிழ் பொங்கட்டும்.
என்றும் அது விளங்கட்டும்.

தேசத்து போர் காற்றை
சுவாசித்த அவையவங்கள்
இரும்பாகி........இருக்குதடா.

முகமூடி வேடங்களின்
முழுமதி போர்வுகளை
உருவியது........போடுமடா

ஆராதனை

கொட்டடா.... உறுமி மேளத்தை
தட்டடா..........நம் தாளத்தை.
ஊதடா............வெண் சங்கை
உயருவோம் அது நம் திறமை.

வேட்கை என்ற தாகத்தில்
ஊற்றெடுக்கும் வேகத்தில்
விதை வெடித்து, வேர் பிடித்து
விருட்சமாவோம் பாரடா.

உதிரங்களை -கொட்டியே
உச்சங்களை -எட்டுவோம்
எச்சங்களை -மீட்கவே
மிச்சங்களை -வெல்லுவோம்.

ஐ நா மன்றத்து முன்றலிலே
ஐயமற்ற தாயகத்து சொந்தமென
பொய்களற்ற பொருள் தேடி சங்கமித்தது

— — — — — — — — —

வாழ்வியல் வாசகம்
"திருமதி" சுஜி ரமேஷ்"

பொறுமையாக இருப்பது என்பது வேறு
ஊமையாக இருப்பது என்பது வேறு
தேவை ஏற்படும் போது வெளிவரப்படாத வார்த்தைகளால் தான்
பொய்களும் உண்மையாகி விடுகிறது.

— — — — — — —

பணக்கார வீட்டு பூச்சட்டியில் முளைத்தாலும்
ஏழை வீட்டு சாக்கடையில் முளைத்தாலும் ரோஜா
ரோஜா தான்.

திருமதி "சுஜி ரமேஷ்" அவர்களால் வெளியிடப்படும் "ஆராதனை" கவிதை நூலுக்கு வாழ்த்துச் சொல்வதில் கொட்டகலை த. ம. வித்தியாலய அதிபராக பெருமிதமடைகிறேன்

இவர் புலம் பெயர் நாட்டுத் தமிழர்களில் ஒருவராக இன்று நெதர்லாந்து நாட்டில் வசித்து வருகிறார். இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கொட்டகலை த. ம. வித்தியாலயத்தில் 1995 காலப்பகுதி வரை உயர்தர கலைப்பிரிவு மாணவியாக இருந்தார். அப்போதைய காலங்களில் நான் அசிரியராக இவரை இலக்கிய போட்டிகள், மாணவ மன்ற நிகழ்வுகள், விளையாட்டுத்துரை என அனைத்திலும் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் பங்குபற்றும் ஒரு மணவியாக அவதானித்திருக்கிறேன்.

இனறு இவரால் வெளியிடப்படும் கவிதை நூலானது. பல்வேறு எண்ணங்களையும், மனித உணர்வுகளையும், புதிய சிந்தனைகளையும் கொண்டுவெளிவருவது புலம் பெயர் தமிழர்களுக்கு எமக்கும் பெருமையளிக்கின்றது

இவர் ஒரு கவிஞராக இன்று பல ஐரோப்பிய நாடுகளில் கவிதை நூல் வெளியீடுகளில் விமர்சகராகவும் சிறந்த பேச்சாலராகவும் பங்குபற்றிபணியாற்றி வருவது எமக்கெல்லாம் பெருமையளிக்கின்றது. இவரது எழுத்துப் பணி சிறக்கவும், இன்னும் பல நூல்களை படைக்கவும் இறையருள் இவருக்கு கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

கடல்கடந்து சென்று புலம் பெயர் தமிழர்களில் இன்று இவர் ஒரு சிறந்தகவிஞராக மிளிர்வது மலையகத்துக்கும் கொட்டகலை த. ம. வி கும் பெருமையளிக்கிறன்றது இவரை அழைத்து பாராட்டி கௌரவிப்பதில் கொட்டகலை வாழ் சமூகமும், பாடசாலையும் பெருமையடைகிறது.

அன்புடன்
கொட்டகலை த. ம. வித்தியாலய
அதிபர் திரு இரா. சிவலிங்கம்.